கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.
2026-ம் ஆண்டு ஜூன் 24ம் நாள், புதன்கிழமை
அசல் வழக்கு எண்.105/2016
CNR No.TNMD130001142016

* * * **

1) ராஜாராம்
2) செல்வராஜ்
3) அர்ச்சுனன்
4) அலமேலு ... வாதிகள்

/ எதிரிடை /

1) பாண்டியம்மாள்
2) ஜெயபாண்டி
3) சௌந்திரபாண்டி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 12.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக வாதியின் அனுபவத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ, வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6792/2013 மற்றும் ஆவண எண். 6793/2013 கொண்ட கிரையப்பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக் கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:-**

1.1) பகுதி தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் தர்மராஜ் ரெட்டியாருக்கு பூர்வீகச் சொத்துக்கள் என்றும், பகுதி தாவாச் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்களின் வருமானத்திலிருந்து கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், ஆகையால் கிரையம் பெறப்பட்ட

சொத்துக்களும் பூர்வீகச் சொத்துக்களின் வருமானத்திலிருந்து பெறப்பட்டதால் பூர்வீகச் சொத்துக்களாகவே கருதப்படும் என்றும், இந்நிலையில், வாதியின் தகப்பனாருக்குப் பூர்வீக பாத்தியப்பட்ட பொதுக் குடும்பச் சொத்துக்களை ஒன்றாக பொதுவில் வைத்து கூட்டாக அனுபவித்து வருவதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் மேற்படி பொதுக் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை 21.01.1989ம் தேதி சில மத்தியஸ்தர்களை வைத்து குடும்ப ஏற்பாடு மூலம் பாகம் பிரித்துக் கொண்டதாகவும், மேற்படி 21.01.1989ம் தேதிய வாக்கரால் குடும்ப ஏற்பாட்டின் மூலம் அவரவர் பாகத்தில் கிடைத்த சொத்துக்களை அவரவர் தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதாகவும், உண்மையில் பொதுக்குடும்ப சொத்துக்களைப் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகின்ற நிலையில் பாகம் பிரித்துக் கொண்ட சொத்துக்களுக்கு பட்டாவானது வாதியின் முன் பாத்தியஸ்தர் பெயரிலேயே இருந்து வந்தது என்றும்,

1.2) இந்த நிர் 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு தெரியாமல் பெற்ற கூட்டுப் பட்டாவை ஆஸ்பதமாக வைத்துக் கொண்டு 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு ஆவண எண்கள் 6792/2013 மற்றும் 6793/2013ன்படி தாவா சொத்துக்களை வில்லங்கம் செய்து கொடுத்து உள்ளார் என்றும், மேற்படி வில்லங்கம் வாதிகளது உரிமைகளை சட்டத்தின் பார்வையில் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும்,

12.11.2015ம் தேதி அன்று இந்த நிர் பிரதிவாதிகளுக்கு வில்லங்கத்தைத் தீர்த்துக் கொடுக்கக் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை 16.11.2015ம் தேதி பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பவோ, வில்லங்கத்தைத் தீர்த்துக் கொடுக்கவோ முன் வரவில்லை என்றும், மாறாக தாவாச் சொத்துக்களில் வாதிகளின் உரிமைகளையும், அனுபவத்தையுறும் இடையூறு செய்ததால் தாவாப் பிராதை தாக்கல் செய்ததாகவும் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

2.1) தாவா அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் 1 முதல் 3 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனரான தர்மராஜ் ரெட்டியாருக்கு பூர்வீகமாகவும் கிரைய ஆவணங்களின்படியும் தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றும், மேற்படி பிரதிவாதி தர்மராஜ் செட்டியார் அவர்களின் வாரிசு என்பதை இந்த 1 முதல் 3 வாதிகள் ஒப்புக் கொண்டு உள்ளனர் என்றும், மேலும் தாவா 1 முதல் 10 இலக்க சொத்துக்களில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பிரிவினை இல்லாத ஒரு பாகத்தை மட்டும் பிரதிவாதியின் மகன்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி உள்ளதாகவும்,

2.2) ஆவணங்களின்படி இந்த 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமைமூலம் ஏற்பட்டு தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அதனால் இந்த வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும, அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் மேற்படி 25.09.2013ம் தேதிய ஆவண எண்கள் 6792/13 மற்றும் 6793/13 என்ற ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் என்றும், வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி பிரதிவாதி தர்மராஜ் ரெட்டியார் அவர்களின் மகளான தனக்கு தாவா சொத்துக்களில் கிடைக்கக்கூடிய ஒரு பாகத்தினை பொறுத்து பிரதிவாதியின் மகன்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமை மாற்றம் செய்துள்ளதாகவும், இந்த வாதிகள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தாவா வழக்கினை பிரதிவாதிகளின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**3. எழுவினாக்கள்**:–

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதிகளின் தனித்த அனுபவத்தில் உள்ளதா?
2. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?
4. 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6792/2013ன்படி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?
5. 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6793/2013ன்படி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

6. வாதிகள் வழக்குரையில் கட்டியுள்ள முத்திரைக்கட்டணம் சரியானதா?
7. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**4) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : –

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு:–**
**5) எழுவினா எண்கள்–1,2 ற்கான தீர்வு**:–

1. தாவா சொத்து வாதிகளின் தனித்த அனுபவத்தில் உள்ளதா?
2. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

5.1) வழக்கு சொத்துக்கள் 1 முதல் 3 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், அதன்படி 1 முதல் 3 வாதிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு இடையே வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை

ஆவணம் ஏற்பட்டது என்றும், இந்நிலையில், மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி வழக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றும், 4ம் வாதி 3ம் வாதியின் மனைவி ஆவார் என்றும், மேற்படி 3ம் வாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை 4ம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அதன்படி 1 முதல் 3 வாதிகளுக்கு வழக்கு சொத்துக்கள் தனித்து பாத்தியப்பட்டு தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் வா.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

5.2) அதற்கு மாறாக, பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் 1 முதல் 3 வாதிகள் 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் என்றும், 2, 3 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையின் கிரைய சொத்துக்கள் என்றும், அதன்படி 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்த நிலையில் 1/4 பாகம் கிடைக்கத்தக்கது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.3) மேலும், மேற்படி 1/4 பாகத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலம் 2, 3 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படியான பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்களானது 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான பாகமான 1/4 பாகத்தை பொறுத்து மட்டுமே 2, 3

பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளதால், பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 சட்டப்படியான ஆவணம் என்று சாட்சியமளித்துள்ளார்.

5.4) வழக்கு சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று வா.சா.1 சாட்சியமளித்த போதும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணங்களிலும் வழக்கு சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்களாக இல்லை. மேலும், மேற்படி வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணம் ஆகும். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படியானது அல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள நிலையில், மேற்படியான வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படியானது என்று நிரூபணம் செய்ய வேண்டியது வாதிகளின் கடமை ஆகும்.

5.5) எனினும், வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 ஆவணத்தை நிரூபணம் செய்யும்விதமாக வா.சா.1 மட்டுமே சாட்சியமளித்துள்ளார். மேற்படி, வா.சா.ஆ.2ல் உள்ள சாட்சிகள் யாரையும் வாதிகள் தரப்பில் விசாரணை செய்யவில்லை. மேலும், 1ம் பிரதிவாதி 1, 3 வாதிகளின் உடன்பிறந்த சகோதரர்கள் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்ற நிலையிலும், 1ம்

பிரதிவாதிக்கு சட்டப்படியாக பாகம் எதுவும் கிடைக்கக்கூடியது அல்ல என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்ய வேண்டியது சட்டப்படியானது ஆகும். எனினும், 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை பொறுத்து சட்டப்படியாக எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிகள் தரப்பில் சாட்சி, சான்றவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

5.6) மேலும், பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின்படி வழக்கு சொத்துக்களை பொறுத்து 2, 3 பிரதிவாதிகள் கூட்டு பட்டாதாரர்கள் ஆவார்கள். இந்நிலையில், வழக்கு சொத்துக்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தனித்து பாத்தியப்பட்டது என்று வா.சா.1 சாட்சியத்தை தவிர வேறு சாட்சி, சான்றாவணங்கள் இல்லாத நிலையில், வா.சா.ஆ.2 ஆவணமானது சட்டப்படியானது என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்ததாக ஏற்க இயலாது. பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 வருவாய்துறை ஆவணங்களின்படி 2, 3 பிரதிவாதிகள் கூட்டு பட்டாதாரர்களாக காணப்பட்ட நிலையில், வழக்கு சொத்துக்கள் வாதிகளின் தனித்த அனுபவத்திலும், வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டும் இருந்து வருகிறது என்ற வாதிகள் தரப்பு வாதமானது போதிய சாட்சி, சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எழுவினாக்கள் 1, 2 ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**6) எழுவினா எண்– 3 ற்கான தீர்வு**:–

3. வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 வருவாய்துறை ஆவணங்களின்படி தாவா சொத்தை பொறுத்து 2, 3 பிரதிவாதிகள் கூட்டு பட்டாதாரர்களாக காணப்பட்ட நிலையிலும், வழக்கு சொத்துக்கள் வாதிகளின் தனித்த அனுபவத்திலும், வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டும் இருந்து வருகிறது என்ற வாதிகள் தரப்பு வாதமானது போதிய சாட்சி, சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், வாதிகள் கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–3ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**7) எழுவினாக்கள் எண்–4, 5 ற்கான தீர்வு**:–

4. 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6792/2013ன்படி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி

செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

5. 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6793/2013ன்படி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?

வழக்கு சொத்துக்கள் வாதிகளின் தனித்த அனுபவத்திலும், வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டும் இருந்து வருகிறது என்ற வாதிகள் தரப்பு வாதமானது போதிய சாட்சி, சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், வாதிகள் கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், வாதிகள் கோரியுள்ள 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6792/2013 மற்றும் ஆவண எண்.6793/2013ன் படியான செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள்–4, 5ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**8) எழுவினா எண்–6 ற்கான தீர்வு:–**

6. வாதிகள் வழக்குரையில் கட்டியுள்ள முத்திரைக்கட்டணம் சரியானதா?

வாதிகள் வழக்குரையில் கட்டியுள்ள முத்திரைக்கட்டணம் சரியானதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைத்த போதும், அதனை நிரூபணம் செய்யும்விதமாக பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சட்டப்படியான சாட்சி, சான்றாவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, வாதிகள் வழக்குரையில் கட்டியுள்ள முத்திரைக்கட்டணம் சரியானதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–6ற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**9) எழுவினா எண்–7 ற்கான தீர்வு:–**

7. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

தரப்பினர்களுக்கு கிடைக்ககூடிய வேறு பரிகாரங்கள் என்ன என்று பரிசீலனை செய்கையில், தாவாச்சொத்தினை பொறுத்து வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று

இந்நீதிமன்றம் வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா எண்–7ற்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 24.06.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.24 13:13:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **வாதி தரப்பு சாட்சிகள்** :–

வா.சா.1 – ராஜாராம்

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள்: –**

வா.சா.ஆ.1. கொடி வழி ஜாபிதா.

வா.சா.ஆ.2. 26.03.1993 தேதி வாதிகளும், அவரது தகப்பனாரும் எழுதிகொண்ட பாகலிஸ்ட்.

வா.சா.ஆ.3. ராஜாராம் பெயரிலான கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 7)

வா.சா.ஆ.4. 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 12)

வா.சா.ஆ.5. அர்ச்சுணன் அலமேலு பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 3)

வா.சா.ஆ.6. 25.09.2013ம் தேதியிட்ட ஜெயபாண்டி, சௌந்திரபாண்டி ஆகியோர்களின் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல்.

வா.சா.ஆ.7. 25.09.2013ம் தேதியிட்ட ஜெயபாண்டி, சௌந்திரபாண்டி ஆகியோர்களின் பெயரிலான ஆவண எண்.6793/2013 தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல்.

வா.சா.ஆ.8. 12.11.2015ம் தேதி வாதி சார்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புதல் அட்டை.

வா.சா.ஆ.9. 11.08.1937 தேதியிட்ட சீதாலெட்சுமியம்மாள் பெயரிலான கிரையப்பத்திரத்தின் அசல்.

வா.சா.ஆ.10. 13.06.1977 தேதியிட்ட பாண்டியம்மாள் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல்.

வா.சா.ஆ.11. 10.10.1986 தேதிய தர்மராஜ் பெயரிலான கிரையப்பத்திரத்தின் அசல்.

வா.சா.ஆ.12. 25.02.1999 தேதியிட்ட தர்மராஜ் ரெட்டியாரின் இறப்பு சான்றிதழ்.

வா.சா.ஆ.13. 25.07.1991ம் தேதியிட்ட அலமேலு பெயரிலான கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல்.

3. **<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>:**

பி.வா.சா.1 – பாண்டியம்மாள்

4. **<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 25.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.6792/2013 என்ற எண்கொண்ட தான செட்டில்மெண்டு ஆவணம். |
| பி.வா.சா.ஆ.2 | ஆவண எண்.6793/2013 என்ற எண்கொண்ட தான செட்டில்மெண்டு ஆவணம். |
| பி.வா.சா.ஆ.3 | பட்டா எண்.2149ற்கான கணினி சிட்டா. |
| பி.வா.சா.ஆ.4 | பட்டா எண்.2037ற்கான கணினி சிட்டா. |

5. **<u>நீதிமன்ற சாட்சிகள்</u>:** இல்லை.

6. **<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :**இல்லை.

7. **<u>சாட்சிய சான்றாவணங்கள்</u> :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.24 13:13:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.105/2016
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 24.06.2026